# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 31

13.08 2023







இலங்கைப் பொருளாதாரத்தை பாதிக்கும் காலநிலை மாற்றம் 02





பல சாவல்களைச் சந்தித்து சாதிக்க முடிந்தது எப்படி? 12





நாம் ஏன் பூச்சிகளைப் பாதுகாக்க வேண்டும்? 18


# இலங்கையால் மீண்டு வர முடியுமா?


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# இலங்கைப் பொருளாதாரத்தை பாதிக்கும் காலநிலை மாற்றம்



- சேரமான் -

> "கணிசமான எண்ணிக்கையிலான இலங்கையர்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, உள்நாட்டு மீன்பிடி போன்ற மழைவீழ்ச்சியை நம்பிய வருமான மூலங்களில் தங்கியிருக்கும் நிலையில், கடுமையான காற்றின் அதிகரிப்பு, வறட்சி மற்றும் மழைவீழ்ச்சி முறைகளில் ஏற்படும் மாற்றம் ஆகியவை அவர்களது உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்."

காலநிலையின் மாற்றம் இந்தியாவின் அரிசி உற்பத்தியைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளது. அந்த நாட்டுக்கு அதிகளவு வருமானத்தை அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தந்த அரிசி ஏற்றுமதியை இந்தியா முற்றாக நிறுத்திவிட்டது. கடந்த வாரத் தமிழர் பொருண்மியத்தில் அதனையிட்டு பார்த்திருந்தோம். இலங்கையிலும், சர்வ தேசரீதியாகவும் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் குறித்து இந்த வாரம் பார்ப்போம்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியானது உலகின் பல நாடுகளைக் பாதிக்கக்கூடும் எனவும், காபன் மாசு உமிழ்வுகள் அதிகரிப்பானது இன்னும் ஒரு தசாப்தத்துக்குள் 59 நாடுகளின் கடன் சேவைச் செலவுகளை அதிகரிக்கச் செய்யும் எனவும் புதிய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளான சீனா, இந்தியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளின் கடன் மதிப்பீடுகளும் இதனால் கீழிறக்கப்படலாம் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். நாடுகளின் கடன் வாங்கலுக்கான செலவுகள் அதிகரிப்பினால் இதன் விளைவுகள் கடுமையானதாக இருக்கும் எனவும் எச்சரிக்கப்படடுள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட, "மெனேஜ்மென்ட் சயன்ஸ்" சஞ்சிகையில் இவ்விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றத்தினால் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகள் ஏற்கெனவே தெளிவாகவுள்ளன. உலகளாவிய உற்பத்தியை அண்மைக்கால வெப்ப அலைகள், 0.6 சதவீதத்தினால் குறைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமது மதிப்பீடுளின் போது, காலநிலை மாற்றத்தினால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் குறித்துக் கடன் தரப்படுத்தல் மதிப்பீட்டு நிறுவனங்கள் எச்சரிக்கைகளை விடுத்துள்ளன.

இங்கிலாந்தின் நோர்விச் நகரிலுள்ள, ஈஸ்ட் ஏங்கிலியா பல்லைக்கழகமும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப திருத்தப்பட்ட கடன் தரப்படுத்தல் முறைமையை உருவாக்கியுள்ளன. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மாதிரிகள் மற்றும் பொருளாதார எதிர்வுகூறல்களின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரம் காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படும் அச்சுறுத்தல்களைக் கொண்டது எனத் தரப்படுத்தல் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, கடும் பாதிப்புகளால் எதிர்கொள்ளப்படும் நிச்சயமின்மை காரணமாக, மதிப்பீட்டுச் செயற்பாடுகள் குறித்து எச்சரிக்கைகளை விடுத்துள்ளன.

ஈஸ்ட் ஏங்கிலியா பல்லைக்கழகமும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் மேற்படி ஆய்வுத் திட்டத்துக்காகச் செயற்கை நுண்ணறிவு மாதிரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக, எஸ். அன்ட் பி. பூகோளத் தரப்படுத்தல் முறைமையைப் பயன்படுத்தியுள்ளன. பின்னர், காலநிலை பொருளாதார மாதிரிகள் மற்றும் எஸ் அன்ட் பியின் இயற்கை பேரிழிவு ஆபத்து மதிப்பீடுகளைப் பயன்படுத்தி, மாற்று காலநிலை சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய கடன்தரப்படுத்தல் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலகின் சராசரி வெப்பநிலை அதிகரிப்பை 2 பாகை செல்சியஸ்ீக்குள் பேணுவது என்ற, பாரிஸ் காலநிலை ஒப்பந்த இலக்கை உலகம் அடைந்துகொண்டால், நாடுகளின் கடன் தரப்படுத்தல் மதிப்பீடுகளுக்குக் குறுகிய கால மற்றும் நீண்டகால நோக்கில் சிறிய தாக்கங்களே ஏற்படும் என மேற்படி ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

எவ்வாறெனினும், அதிகமான காபன் உமிழ்வுகள் காரணமான மோசமான நிலையினால், உலகளாவிய ரீதியில் கடன் சேவைச் செலவுகளில் அதிகரிப்பு ஏற்படும் எனத் தெரியவந்துள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்பு நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர்கள் அளவிலானதாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தின் பௌதீக பாதிப்புகளை, குறைந்த கடன் தரப்படுத்தல் புள்ளிகளைக் கொண்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தாங்கிக்கொள்ள நேரிடும். எனினும், உயர்ந்த கடன் தரப்படுத்தல் மதிப்பீடுகளைக் கொண்ட நாடு



களும், கடன் தரப்படுத்தல் மதிப்பீட்டுப் புள்ளிகள் தரமிறக்கப்படும் நிலையை எதிர்நோக்கக்கூடும் என மேற்படி ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

எஸ்.அன்ட் பி பூகோளத் தரப்படுத்தல் நிறுவனமானது, தனது தரப்படுத்தல்களுக்குச் சுற்றாடல், சமூக மற்றும் நிர்வாக (ஈ.எஸ்.ஜி) கொள்கைகளைப் பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளின் ஆபத்து மற்றும் அதை நிவர்த்திப்பதற்கான செலவுகள் குறித்தும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஃபிட்ச் தரப்படுத்தல் நிறுவனமானது தமது ஈ.எஸ்.ஜி. அடிப்படையிலான புள்ளியிடல் முறைமையில். சுற்றாடல் பின்விளைவுகளினால் பாதிக்கப்படக்கூடிய தன்மையையும் தனது மதிப்பீடுகளில் ஓர் அம்சமாக உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

### இலங்கை நிலை என்ன?

தற்போதைய பூகோளப் போக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால், 2050 ஆம் ஆண்டில் இலங்கை தனது வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 வீதம் வீழ்ச்சியைக் காணும் எனவும் இந்த நூற்றாண்டின் இறுதியில் அது 6.5 வீதமாக அதிகரித்துவிடும் எனவும் தெற்காசியாவுக்கான காலநிலை மற்றும் பொருளாதாரம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி 2014 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், காலநிலை மாற்றத்தை தணிக்கச் செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், அப்பாதிப்பை 1.4 வீதமாகக் குறைத்துவிடலாம் எனவும் இலங்கையின் அண்மைக்காலப் பொருளாதார நெருக்கடிநிலைக்கு முன்னர் வெளியிடப்பட்ட மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கணிசமான எண்ணிக்கையிலான இலங்கையர்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, உள்நாட்டு மீன்பிடி போன்ற மழைவீழ்ச்சியை நம்பிய வருமான மூலங்களில் தங்கியிருக்கும் நிலையில், கடுமையான காற்றின் அதிகரிப்பு, வறட்சி மற்றும் மழைவீழ்ச்சி முறைகளில் ஏற்படும் மாற்றம் ஆகியவை அவர்களது உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மழை வீழ்ச்சி குறைவதால், தாழ்நில மற்றும் மத்திய மலைநாட்டில் உள்ள தேயிலை உற்பத்தியும் பாதிப்படையும் எனவும் மேற்படி அறிக்கை எச்சரித்திருந்தது.

இலங்கையின் பரந்துபட்ட கரையோரப் பிரதேசத்தில், மீன்பிடிக்குக் கணிசமான பாதிப்பு ஏற்படுவதுடன், கடுமையான அலைகள், நீர் மட்டம் உயர்தல் ஆகியவற்றால் கரையோர உயிர்த் தொகுதியும் பாதிக்கப்படும். இதனால், யாழ்ப்பாணம், மற்றும் கம்பஹா பகுதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவைத் தொடர்ந்து இலங்கையிலும் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும் அதன் விலை பெருமளவுக்கு அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.


தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

# குறும்படப் போட்டி 2023



தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு வெளிவரும் "தமிழர் பொருண்மியம்" வார இதழ், ஓகஸ்ட் மாதத்தில் நடத்தவுள்ள "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வை முன்னிட்டு நடத்தும் குறும்படப்போட்டி.

» குறும்படங்கள் ஒவ்வொன்றும் 3 நிமிடத்திற்கு குறையாமலும் 8 நிமிடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
» குறும்படங்கள் எமது பொருளாதாரத்தைப் பேசுவதாக அமைதல் வேண்டும்.
» வேறு எந்த இடங்களிலும் வெளியிடப்படாததாகவும், யாரையும் புண்படுத்தாததாகவும் இருக்க வேண்டும்.
» நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
» உங்களைப் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 31.08.2023
» உங்கள் குறும்படங்களை HD தரத்தில் Google Drive வில் பதிவேற்றம் செய்து கீழ்காணும் மின்னஞ்சலுக்கு, முழுமையான விபரங்களோடு அனுப்பிவைக்க வேண்டும்: Tamilseconomy@gmail.com

முதல் பரிசு - ரூபா 25,000
2ஆம் பரிசு - ரூபா 15,000
3ஆம் பரிசு - ரூபா 10,000
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : 0777276949

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## செயற்கை நுண்ணறிவு

மனிதனின் கண்டுபிடிப்புக்கள் அனைத்திலும் சாதகமான அம்சங்கள் இருப்பது போலப் பாதகமான அம்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன. செயற்கை நுண்ணறிவு மனித குலத்தின் மிகப்பெரிய சாதனை எனக் கொண்டாடப்பட்டாலும் கூட, அதன் பாதகமான அம்சங்களை இப்போது எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் மனித குலத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் சாட்ஜிபிடி மென்பொருள் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அறிமுகமானது. கல்வி, மருத்துவம், சந்தைப்படுத்தல், நிரல் உருவாக்கம் தொடங்கிப் பல்வேறு துறைகளில் மிகப் பெரும் மாற்றங்களைச் சாட்ஜிபிடி ஏற்படுத்தி வருகிறது. இதனால், பலர் வேலை இழப்புக்கும் உள்ளாகி வருகின்றனர்.

மனிதர்கள் தமது அனுபவம், அறிவு, ஆற்றல் என்பவற்றைப் பயன்படுத்திச் செய்யும் பல வேலைகளை இப்போது, இந்த இயந்திரங்கள் செய்யத் தொடங்கியுள்ளன. இதனால், அனுபவமும் ஆற்றலும் உள்ள பலர் வேலைகளை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்ற ஆபத்து சர்வதேச ரீதியாகவே இப்போது உருவாகியிருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வைக் காண்பது?

“சாட்ஜிபிடி அறிமுகத்தால் என்னுடைய வேலையை இழந்துள்ளேன்” என்று கொல்கத்தாவைச் சேர்ந்த 22 வயதான சரண்யா பட்டாச்சார்யா தெரிவித்துள்ளார். “நான் கல்லூரியில் படித்துக் கொண்டே பகுதி நேரமாக எழுத்து துறை சார்ந்து வேலை பார்த்து வந்தேன். அதன் மூலம் மாதம் 20 ஆயிரம் ரூபா வருமானம் கிடைத்தது. இதை வைத்து என்னுடைய வீட்டுச் செலவுகளைக் கவனித்து வந்தேன். ஆனால், தற்போது அந்த வேலை பறிபோகியுள்ளது. அதற்குக் காரணம் சாட்ஜிபிடி” என்று சொல்கிறார் அந்த இளம் பெண்.

“முன்பு எனக்கு ஒவ்வொரு மாத 10 கட்டுரைகள் எழுத எங்கள் நிறுவனத்திடமிருந்து வாய்ப்புக் கிடைக்கும். இப்போது மாதம் ஒரு கட்டுரைக்குக்கூட வாய்ப்புக் கிடைப்பதே அரிதாக உள்ளது. சாட்ஜிபிடி மூலம் எங்கள் நிறுவனம் தங்களுக்குத் தேவையான கட்டுரையை உருவாக்கிக் கொள்கிறது. இத னால், எனக்கான வாய்ப்புக் குறைந்துள்ளது. இதன் விளைவாக என்னுடைய வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது” என்பது அந்தப் பெண்மணியின் கவலை.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் எத்தனை துறைகளில் வேலை வாய்ப்பைப் பறிக்கும் என்பதை நினைத்தால் பெரும் அச்சம் எழுகிறது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக முறையான கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கருத்தையும் அவர் தெரிவித்துள்ளார். இது ஓர் உதாரணம் மட்டும்தான். இது போன்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட வேண்டும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### வவுனியா வியா விலேஜ்

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வியா விலேஜ் திட்டம் குறித்த கட்டுரை பலரையும் சிந்திக்க வைத்துள்ளது. எம்மவர்களை வெறுமனே நிவாரணங்களைப் பெறுபவர்களாக மட்டும் வைத்திருக்காமல், அவர்களைத் தொழில்முனைவோர்களாக்கும் முயற்சி உண்மையில் பாராட்டப்பட வேண்டியது. போற்றப்பட வேண்டியது. தொடர்ந்தும் நிவாரணங்களை வழங்கிக்கொண்டிருக்கும் அமைப்புக்களும், புலம்பெயர்ந்த மக்களும் இதனை ஒரு முன்னுதாரணமாகக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் இது போன்ற சில அமைப்புக்களை உருவாக்கினால், அது உண்மையில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மக்கள் தமது சொந்தக் கால்களிலேயே நிற்பதற்கு இது பெருமளவுக்கு உதவும்.

**எம்.பரமேஸ்வரன், வட்டுக்கோட்டை**

●●●

### நாம் தவறு செய்யவில்லை...

நாம் தவறு செய்யவில்லை.. ஆனால் தோற்றுவிட்டோம் என்ற தலைப்பில் கடந்த வாரம் தபேந்திரன் எழுதியிருந்த கட்டுரை சமூகத்தில் மலிந்து காணப்படும் ஒரு பிரச்சினையை வித்தியாசமான கோணத்தில் வெளிப்படுத்தியிருந்தது. எம்மில் பலரிடமும் உள்ள பிரச்சினையும் இதுதான். பாடசாலை ஆசிரியர்கள் பலர் உட்பட பொறுப்பான பதவிகளில் இருக்கும் பலரும் தாம் படித்தது போதும், அதனை வைத்துக்கொண்டே காலத்தை ஓட்டிவிடலாம் என்ற எண்ணத்துடன்தான் இருக்கின்றார்கள். அவர்கள் தம்மை அப்டேட் பணிணிக்கொள்வதில்லை. புதிய புதிய விடயங்களைத் தேடிச் சென்று கடிப்பதில்லை. ஆசிரியர் - மாணவர் இடைவெளிக்கு அதுவும் காரணமாகின்றது. நல்ல கட்டுரை. பயனுள்ள தகவல்களைத் தந்துள்ளது.

**கே.சாந்தினி. கொழும்பு**

### தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

## சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

--------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------
**முகவரி** - ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ------------------------------------
**சந்தாக் காலம்** - ------------------------------------------
**செலுத்திய தொகை** - ---------------------------------------
**செலுத்திய திகதி** - ---------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,59,400 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,73,800 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 180/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 350/= |
| தக்காளி | - 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 240/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 360/= |
| பூசணி | - 100/= |
| புடோல் | - 80/= |
| வாழைக்காய் | - 150/= |
| சின்ன வெங்காயம் | - 300/= |
| பெரிய வெங்காயம் | - 150/= |
| பாவற்காய் | - 350/= |
| வெண்டிக்காய் | - 80/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 200/= |
| லீக்ஸ் | - 250/= |
| பீற்றூட் | - 160/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 150/= |
| போஞ்சி | - 450/= |



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** இறக்குமதிக் கட்டுப்பாடுகளை முழுமையாக நீக்குவதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றதா? இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் எவை?

**ரி.மல்லிகாதேவி**
**ஏழாலை.**

**பதில் -** பெரும்பாலான பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஏற்கனவே நீக்கப்பட்டுவிட்டன. ஏனையவற்றுக்குமான கட்டுப்பாடுகள் செப்டம்பருடன் நீக்கப்பட்டு விடும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அறிவித்திருக்கின்றார். ஆனால், வாகனங்களுக்கான இறக்குமதித் தடை மட்டும் நீடிக்கப்போகின்றது.

இலங்கை பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டது போன்ற ஒரு கருத்திலேயே இந்த அறிவித்தலை அமைச்சர் வெளியிட்டிருக்கின்றார். ஆனால், கொள்கை வகுப்பாளர்களைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தின் இந்த முடிவு பாதகமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்.

அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை தான் இறக்குமதிக்கான தடைகளை அரசாங்கம் கடந்த வருத்தில் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குக் காரணமாக இருந்தது. அளவுக்கு அதிகமான இறக்குமதி, ஏற்றுமதி மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானத்தில் பற்றாக்குறை, உல்லாசப் பயணத்துறை மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானம் எதிர்பார்க்கப்பட்டளவுக்கு வராதது போன்றன தான் அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்குக் காரணமாக இருந்தது. இறக்குமதித் தடையும் இந்த நிலையைச் சமாளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒன்றுதான்.

இப்போது நிலைமைகள் ஒன்றும் முழுமையாக மாற்றமடைந்துவிடவில்லை. ஏற்றுமதிகள் மூலமான வருமானம் பெருமளவுக்கு அதிகரிக்கவில்லை. அதே வேளையில் உல்லாசப் பயணத்துறை மூலமான வருமானம் ஓரளவுக்குக் கிடைத்தாலும் கூட இந்த நிலைமைகளை முழுமையாக சமாளிப்பதற்கு போதுமானதல்ல. ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அதிகளவுக்கு உல்லாசப்பயணிகள் வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், ஏற்றுமதி வருமானம் அதிகரிக்காமல், இறக்குமதிகளை முழுமையாகத் திறந்துவிடுவது அவசியமானது தானா? என்ற கேள்வி எழுகின்றது.

குறிப்பாக உள்நாட்டில் கோழிப் பண்ணைகள் பெருமளவுக்கு உள்ள நிலையில் முட்டைகளை இறக்குமதி செய்வதும், பழங்கள், பாற் பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதும் உள்நாட்டு உற்பத்தியை வெகுவாகப் பாதிக்கக்கூடியது. இது வெறுமனே சில வியாபாரிகளுக்கும், தரகர்களுக்குமாக முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதன் பின்னணியில் தெளிவான பொருளாதாரக் கொள்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்றை எதிர்கொண்ட பின்னரும் அதே தவறான பாதையில்தான் அரசாங்கம் செல்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 203/= |
| கனடா டொலர் - | 232/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 343/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 231/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 397/= |
| சுவிஸ் பிராங் - | 354/= |
| அமெரிக்க டொலர் - | 313/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 215/= |
| கனடா டொலர் - | 244/= |
| சீன யுவான் - | 46/= |
| யுரோ - | 360/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர் டொலர் | 243= |
| ஸ்ரோலிங் பவுண் - | 416/= |
| சுவிஸ் பிராங் - | 375/= |
| அமெரிக்க டொலர் - | 326/= |

# “லிட்டில் எய்ட்” திறன் விருத்தி மையத்தின் ஏற்பாட்டில் உற்பத்திப் பொருள் கண்காட்சி

கிளிநொச்சி மாவட்டத்தின் திருநகர் பகுதியில் இயங்கி வரும் லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்தின் ஏற்பாட்டில் மாணவர்களின் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தும் கண்காட்சி நிகழ்வு ஒன்றும் மலிவு விற்பனைச் சந்தை ஒன்றும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்தின் ஸ்தாபகர் த.ஜெயபாலன் தலைமையின் கீழ் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. குறித்த நிகழ்வின்போது கிளிநொச்சி மாவட்டத்தின் சுய தொழில் முயற்சியாளர்கள் சந்தை விற்பனைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் கிளிநொச்சியின் சுய தொழில் முயற்சியாளர்களின் பதிவுகளை ஆவணப்படுத்தும் லிட்டில் பேர்ட் எனும் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது.

குறித்த நூலானது திறன் விருத்தி மையத்தின் மாணவர்களின் முழுமையான முயற்சியில் உருவாக்கப்பட்டிருந்த அதே நேரம் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரபல உள்ளூர் உற்பத்தியாளர்கள் நேர்காணல் செய்யப்பட்டு அவர்கள் பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நூல் வெளியீட்டு விழாவின் போது தலைமை உரையை வழங்கிய த.ஜெயபாலன், உள்ளூர் உற்பத்திகளின் தற்போதைய நிலை தொடர்பிலும் - அவற்றை மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் வலியுறுத்தினார்.

அந்த அடிப்படையில் லிட்டில் பேர்ட்




நூலானது கிளிநொச்சி மாவட்டச்சுய தொழில் உற்பத்தியாளர்களை ஆவணப்படுத்தும் முக்கியமான ஒரு நூல் எனக் குறிப்பிட்ட அவர் அங்கு மேலும் பேசியபோது, ”பொருளாதார நெருக்கடி அதற்கு முன்னரான கால கொவிட் தொற்றுக் காலம் ஆகிய இடர்பாடான காலங்களில் கூட இந்தச் சுய தொழில் முயற்சிகளே இலங்கையின் பொருளாதார நகர்வுகளை ஓரளவுக்கேனும் தூக்கி நிறுத்தின.




இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளாக நாம் பார்க்கக்கூடிய அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளிலும் சுய தொழில் முயற்சியாளர்கள் ஆதரிக்கப்பட்டு கொண்டே இருக்கிறார்கள். அதனால் அங்கு திறமையான - புகழ்பெற்ற தொழில் வெற்றியாளர்கள் உருவாக்கப்படுகிறார்கள். ஆனால் நம் நாட்டின் அரச நிறுவனங்களோ - அரசு அதிகாரிகளும் கூட இது தொடர்பில் பெரிதாகக் கவனம் செலுத்துவதில்லை. இதனாலேயே பலர் சுய தொழில் ஒன்றைத் தேடிக் கொள்வதை விடுத்து விட்டு வெளிநாடுகளுக்கு செல்கின்ற எண்ணம் ஒன்றுக்குள் சென்றுள்ளார்கள் என்று இலங்கை உள்ளிட்ட நாடுகளில் சிறு கைத்தொழிலாளர்கள் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கின்ற ஒரு நிலை உருவாகின்றதோ.. அன்று இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதை நோக்கி நகரும்.” என ஜெயபாலன் குறிப்பிட்டிருந்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று இருந்த மாடசாமி சுவேந்திரன் (S.J. ஒருங்கிணைந்த பண்ணை) தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்தார். ”யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கை நெறியைப் படித்திருந்தபோதிலும் கூட அரசு தொழில் ஒன்றை எதிர்பார்த்து நான் அதனைக் கற்கவில்லை. பல்கலைக் கழகத்தில் நான் கற்றுக் கொண்டவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த சுய தொழில் முயற்சியைப் படிப்படியாக ஆரம்பித்து இன்று 40 நாடுகளுக்கு என்னுடைய உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளேன். எனவே முயற்சி செய்வதை ஒருபோதும் நிறுத்தி விடாதீர்கள். தன்னம்பிக்கையுடன் தொழில் முயற்சிகளில் கால் வைக்கக்கூடிய துணிவை வளர்த்துக் கொள்ளுங்கள். ” என்றவாறு தன்னுடைய அனுபவப் பகிர்வை அவர் வழங்கியிருந்தார்.

மேலும். லிட்டில் பேர்ட் நூலுக்கான நயவுரை வண.பிதா ஜோசுவா அவர்களால் வழங்கப்பட்டிருந்தது. “சிறிய மாணவர்களாக இருந்தாலும் கூடச் சிட்டுக்குருவிகள் போல அவர்கள் இந்தப் புத்தகத்தை உருவாக்கியுள்ளார்கள். இலக்கிய முயற்சிகள் - இலக்கிய வரைமுறைகள் இந்த நூலில் உள்ளனவா..? இல்லையா..? என்ற வாத விவாதங்களுக்கு அப்பால் இந்த நூல் நம் அனைவரிடமும் காணப்பட வேண்டிய ஒரு நூல். நமது கிளிநொச்சி மக்கள் தங்களை எவ்வாறு வளப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நூல் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது” என்றவாறு அவர் தன்னுடைய நயவுரையை வழங்







கினார்.

நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து மாணவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான கண்காட்சி நிகழ்வுகள் ஆரம்பித்தன. கண்காட்சி மாத்திரமன்றி மாணவர்களின் உற்பத்திப் பொருட்களும் மலிவு விற்பனைக்கு காட்சிப்படுத்தப்பட்டன. அதுமட்டுமின்றி கிளிநொச்சியின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்த உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டு அவை மலிவு விலைக்கு மக்களுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...
தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட
0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

## classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் – நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457




# பொருண்மியம் விருதுகள் - 2023

**அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க முடிவுத் திகதி ஓகஸ்ட் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் “கிரீன் மீடியா” நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தமிழர் பொருண்மியம் நடத்தும் “கோடைக் கொண்டாட்டம்“ நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவர்கள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்,

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர், தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)
குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும், அத்துடன் எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பெனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.

**சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 31.08.2023**

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
**0777276949**

# இலங்கையால் மீண்டு வர முடியுமா?






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கை தற்போது தனது வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. நெருக்கடி பல காரணிகளால் ஏற்பட்டுள்ளது. அவற்றுள் சில:

- அதிகளவு கடன்: இலங்கையின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 100மூக்கும் அதிகமாக உள்ளது. இந்தக் கடன் சுமையால் இறக்குமதி மற்றும் பிற அத்தியாவசியச் செலவுகளுக்கு நிதியளிப்பதில் அரசுக்குச் சிரமம் ஏற்பட்டுள்ளது.
- அந்நியச் செலாவணிக் கையிருப்பு வீழ்ச்சி: இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு பல தசாப்தங்களில் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் எரிபொருள், உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் அரசுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது.
- பணவீக்கம்: இலங்கையில் பணவீக்கம் 54.6%ஐ எட்டியுள்ளது. இதனால் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாமல் சிரமப்படுகின்றனர்.
- அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு: இலங்கையில் எரிபொருள், உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால்மக்களுக்குத்தேவையான பொருட்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இவையெல்லாம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை எடுத்துக் காட்டும் சில காரணிகளாகும். இந்த நெருக்கடி நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குப் பங்களித்த சில கூடுதல் காரணிகளாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்:

- 2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்: 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் சுற்றுலாத் துறை குண்டுவெடிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.
- கோவிட்-19 தொற்றுநோய்: COVID-19 தொற்றுநோய் இலங்கையின் பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. தொற்றுநோய் சுற்றுலா மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளில் சரிவுக்கு வழிவகுத்தது.
- அரசாங்கக் கொள்கைகள்: அரசாங்கத்தின் சில கொள்கைகளும் பொருளாதார நெருக்கடிக்குப் பங்களித்துள்ளன. உதாரணமாக, 2021 ஆம் ஆண்டில் இரசாயன உரங்களின் இறக்குமதியைத் தடை செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவு விவசாயத் துறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது இலகுவான தீர்வுகள் இல்லாத ஒரு சிக்கலான பிரச்சினையாகும். எவ்வாறாயினும், நெருக்கடியைச் சமாளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும். ஆனால் அதற்கு நேரமும் முயற்சியும் தேவைப்படும். நாடு பல சீர்திருத்தங்களைச் செயற்படுத்த வேண்டும். குறிப்பாக,

1. கடன் மறுசீரமைப்பு: இலங்கை தனது கடனை இன்னும் நிர்வகிக்கக்கூடியதாக மாற்றும் வகையில் மறுசீரமைக்க வேண்டும். நாடு செலுத்த வேண்டிய கடனின் அளவைக் குறைக்கவும், திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை நீடிக்கவும் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது இதில் அடங்கும்.
2. நிதி ஒருங்கிணைப்பு: இலங்கை தனது நிதி நிலைமையை மேம்படுத்துவதற்காக அதன் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை குறைக்க வேண்டும். இதில் செலவினங்களைக் குறைப்பது மற்றும் வரிகளை உயர்த்துவது ஆகியவை அடங்கும்.
3. பொருளாதாரத் சீர்திருத்தங்கள்: இலங்கை தனது நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் பல பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தத் சீர்திருத்தங்களில் வர்த்தகத் தடைகளைக் குறைத்தல், முதலீட்டுச் சூழலை மேம்படுத்துதல் மற்றும் நிதித்துறையை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

இந்தச் சீர்திருத்தங்களை இலங்கை அமுல்படுத்தினால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும். இருப்பினும், இது எளிதானதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். சீர்திருத்தங்கள் செயற்படுத்தக் கடினமாக இருக்கும். அதே சமயம் குறுகிய கால துன்பத்திற்கு வழி வகுக்கும். எவ்வாறாயினும், நீண்ட கால அடிப்படையில் இலங்கை நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அவை அவசியமாகும்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவும் வேறு சில காரணிகள் சில:

சர்வதேச ஆதரவு: பொருளாதார நெருக்




கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு சர்வதேச ஆதரவு தேவைப்படும். இது நிதி உதவி, கடன் நிவாரணம் அல்லது தொழில்நுட்ப உதவி போன்ற வடிவங்களில் வரலாம்.

அரசியல் ஸ்திரத்தன்மை: மீட்சிக்குத் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். அரசியல் ஸ்திரமின்மையால் தடையின்றி அரசாங்கம் சட்டத்தை இயற்றவும், கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும் முடியும்.

பொது ஆதரவு: இலங்கை மக்கள் மீட்சிக்குத் தேவையான சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை அடைவதற்குக் குறுகிய காலத்தில் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்: வெளிநாட்டு நாணயத்தை ஈட்டுவதற்கு இலங்கை அதிக பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்ய வேண்டும். வணிகங்களுக்கு வரிச் சலுகைகள் மற்றும் பிற சலுகைகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்க அரசாங்கம் உதவலாம்.

> ‘ இலங்கை ரூபாயின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே உள்ளது. எனினும், நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தேவையான சீர்திருத்தங்களை செயற்படுத்த முடிந்தால் நீண்ட கால அடிப் படையில் ரூபாயின் மதிப்பு உயர வாய்ப்புள்ளது. ’

வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் திட்டத்தினை அமுல்படுத்தவேண்டும்: வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும். நாட்டின் வர்த்தக சூழலை மேம்படுத்துவதன் மூலமும் முதலீட்டாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதன் மூலமும் அரசாங்கம் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க முடியும்.

சீர்திருத்தங்கள், சர்வதேச ஆதரவு, அரசியல் ஸ்திரத்தன்மை, மக்கள் ஆதரவு ஆகியவற்றின் சரியான கலவையை இலங்கை பெற முடிந்தால் அதன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும். இருப்பினும், இது எளிதானதல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியம். அதற்கு நேரம், முயற்சி மற்றும் தியாகம் தேவைப்படும்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை ரூபாவின் பெறுமதியின் நிலை?

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களை அமுல்படுத்த முடிந்தால் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைய வாய்ப்புள்ளது.

ஏனெனில் இந்தச் சீர்திருத்தங்கள் நாட்டின் பொருளாதார அடிப்படைகளை மேம்படுத்த உதவும். இது முதலீட்டாளர்களுக்கு ரூபாயை மிகவும் கவர்ச்சிகரமான நாணயமாக மாற்றும். எனினும், சீர்திருத்தங்கள் வெற்றியடைந்தாலும் குறுகிய காலத்தில் ரூபாயின் மதிப்பு பலவீனமாகவே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், நாட்டின் கடன் சுமை இன்னும் அதிகமாக இருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பில் இருந்து பொருளாதாரம் மீள்வதற்குக் காலம் எடுக்கும். நீண்ட கால அடிப்படையில் இலங்கை சீர் திருத்தங்களை நடைமுறைப்படுத்தி நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடிந்தால் ரூபாயின் மதிப்பு நெருக்கடிக்கு முந்திய நிலைக்கு உயர வாய்ப்புள்ளது. இருப்பினும் இதற்கு நேரமும் முயற்சியும் அவசியம்.

எதிர்காலத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதியைப் பாதிக்கக்கூடிய சில காரணிகள் சில:

- பொருளாதார சீர்திருத்தத்தின் வேகம்: இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களை எவ்வளவு விரைவாக நடைமுறைப்படுத்தமுடியுமோ, அவ்வளவு வேகமாக ரூபாயின் பெறுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது.
- சர்வதேச ஆதரவின் நிலை: இலங்கைக்கு எந்தளவிற்குச் சர்வதேச ஆதரவு கிடைக்கிறதோ, அந்த அளவுக்குச் சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதும் இலகுவாக இருக்கும்.
- அரசியல் ஸ்திரத்தன்மை: கடந்த காலத்தினைவிடத் தற்போது இலங்கையில் அதிக அரசியல் ஸ்திரத்தன்மை இருப்பதால் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் அதன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது அரசாங்கத்திற்கு ஒப்பீட்டளவில் எளிதாக இருக்கும்.
- தியாகங்களைச் செய்யக் கூடிய பொது மக்களின் விருப்பம் மற்றும் மனோபாவம்: இலங்கை மக்கள் குறுகிய காலத்தில் தியாகங்களைச் செய்ய எவ்வளவு விருப்பம் காட்டுகிறார்களோ அந்தளவுக்கு நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது இலகுவாக இருக்கும்.

மொத்தத்தில் இலங்கை ரூபாயின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே உள்ளது. எனினும், நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குத் தேவையான

(23ஆம் பக்கம் பார்க்க)

# பல சவால்களைச் சந்தித்து சாதிக்க முடிந்தது எப்படி?

## பெண் தொழிலதிபர் நடராசா ரஞ்சிதமலர்




நேர்கண்டவர் - ஞா.கவினி

பல போராட்டங்களைத் தாண்டி இன்றும் உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்த்து வணிகமயப்படுத்திக் கொண்டிருக்கும் கிளிநொச்சியின் பெண் தொழிலதிபர் நடராசா ரஞ்சிதமலரினை தமிழர் பொருணமியம் செவ்வி கண்டது.

எமது மக்களின் அத்தியாவசியத் தேவையான உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமின்றி, அவர்களுக்கு போசனையுள்ள பதார்த்தங்களைக் கொடுக்க வேண்டும் என்ற ஆசையும் தனது தொழிலை விருத்தி செய்ய வேண்டும் என்ற நம்பிக்கையும் கொண்டு இன்று வரை பத்துக்கும் மேற்பட்ட உற்பத்திகளை செய்து வருகிறார் நடராசா ரஞ்சிதமலர்.

ஆரம்பத்தில் ஒன்றிரண்டு தொழிலாளர்களுடன் ஆரம்பித்த இவரின் தொழில் பயணமானது இன்று பலருக்கு நேரடியாகவும் மறைமுகமானதுமான தொழில் வாய்ப்புகளை வழங்கும் சிறந்த தொழில் நிறுவனமாக ரஞ்சிதமலரின் ரஞ்சி சிறு கைத்தொழில் உற்பத்திகள் நிறுவனம் திகழ்கின்றது. எல்லாச் சிறு தொழில் முயற்சியாலர்களுக்கும் ஏற்படும் இடரினை போலவே ரஞ்சிதாமலருக்கும் முதலீட்டு பொருளாதாரம் என்பது மிகவும் சிக்கலாகவே இருந்திருக்கிறது. தமது நிலங்களில் விளையும் தானியங்களோடு உள்ளூரில் கிடைக்கும் அத்தனை வளங்களையும் பெறுமதி சேர்த்துப் பயன்படுத்துகிறார் ரஞ்சித மலர்.

இலங்கையின் பல பிரதேசங்களிலும் ரஞ்சி உற்பத்திகள் பலத்த வரவேற்பை பெற்றுள்ளதோடு, இலங்கையைத் தாண்டியும் பல்வேறு நாடுகளுக்கு தனது உற்பத்திகளை வெற்றிகரமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார். “நான் பார்க்காத தேசங்களையெல்லாம் என் கைவண்ணங்களிலான உற்பத்திகள் பார்க்கின்றன” என்று பெருமை கொள்ளும் ரஞ்சிதமலர் ஒரு சிறந்த தன்னம்பிக்கை உள்ள பெண்மணி. அடிப்படை தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாது இருந்த ஒரு காலத்தில் தன்னையும் தான் சார்ந்தோரை மாத்திரமில்லாது தன்னைப் போன்ற தொழில் முயற்சியாளர்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறார்.

### சவால்கள்

உள்ளூர் உற்பத்தியாளர்கள் அல்லது சிறு தொழில் முயற்சியாளர்கள் என்றாலே முதலில் எங்களை நோக்கி ஏவப்படுவது சவால்கள்தான். சவால்களைச் சந்திக்கையில் தான் நாங்கள் இன்னும் சாதிக்க வேண்டும் என்கின்ற நம்பிக்கையும் நமக்கு வருகிறது. மூலதனம் ,மூலப் பொருட்கள், சிறந்த நம்பகமான தொழிலாளர்கள், இட வசதி, இயந்திரங்கள் என்று இன்ன பிற சவால்கள் ஏற்பட்டபோதும் அவற்றையெல்லாம் தாண்டி இத்தனை வருடங்களுக்குப் பிறகு இன்றும் சிறு கைத் தொழில் நிலைத்து நிற்பதற்குத் தன்னம்பிக்கை மாத்திரமே கை கொடுத்திருக்கிறது.

நமது இக்கட்டான நேரங்களில் எல்லாம் நம்மோடு பயணித்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இந்த நேரத்தில் நாங்கள் நன்றி சொல்ல வேண்டும். அத்தோடு நமது குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு நமக்கு இருக்குமேயானால் எந்தத் தொழிலிலும் எங்களால் வெற்றி பெற முடியும்.

### சந்தைவாய்ப்பு

எல்லோருக்கும் போல ஆரம்பத்தில் சந்தை வாய்ப்புகள் மிகவும் குறைவாகதான் இருந்தன. கொஞ்சம் கொஞ்சமாக எனது பொருளின்தரமும்எனது நாணயமும் மக்களுக்கு அறிமுகமாக, தற்போது நமது பொருட்களிற்கான கேள்வி அதிகமாக இருக்கின்றது. எப்போதும்வாடிக்கையாளர்கள் விரும்பும் விதமாக தரமான மற்றும் நியாயமான விலையில் உற்பத்திகளைக் கொடுக்கும்போது சந்தைப்படுத்தலில் பெரிய இடர்களை எதிர்நோக்க வேண்டி

**“ இலங்கையின் பல பிரதேசங்களிலும் “ரஞ்சி” உற்பத்திகள் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, இலங்கையை தாண்டியும் பல்வேறு நாடுகளுக்குத் தனது உற்பத்திகளை வெற்றிகரமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார். “நான் பார்க்காத தேசங்களையெல்லாம் என் கைவண்ணங்களிலான உற்பத்திகள் பார்க்கின்றன” என்று பெருமை கொள்ளும் ரஞ்சிதமலர் ஒரு சிறந்த தன்னம்பிக்கை உள்ள பெண்மணி ”**




வருவ தில்லை. குறிப்பாக உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு மதிப்புக் கூட்டி அவற்றை விற்பனை செய்யும் போது வெளிநாடுகளில் இருந்து வரும் வாடிக்கையாளர்கள் மிகவும் விரும்பி கொள்வனவு செய்கின்றனர். இந்த அவசரயுகத்தில் உடனடி தயாரிப்புகளுக்கான எதிர்பார்க்கை அதிகமாக இருக்கிறது. உதாரணமாக அரிசியை நனைய வைத்து, உரலில் இடித்து, பின்பு அதனை வறுத்து, அரித்து பக்குவப்படுத் தும் பொறுமையும் அதற்கான நேரமும் பலருக்கும் கிடைப்பதில்லை. தங்கள் குடும்பத்திற்குப் போஷாக்கான உணவினை கொடுக்க வேண்டும் என்று விரும்புகின்ற பல குடும்ப பெண்களுக்கு கூட இவற்றைத் பதப்படுத்துவதற்கான நேர அவகாசம் கிடைக்காமல், இவற்றை தரமாக உற்பத்தி செய்யும் எங்களிடம் மிகவும் சந்தோஷமாகவே பெற்றுச் செல்கின்றனர். எங்களிடம் உற்பத்திப் பொருட்களை வாங்கும் பலர் மீண்டும் எங்களை நாடி வருவதும் வாடிக்கையாளர்கள் ஆவதும் தொடர்ந்து நடைபெறும் ஒரு விடயம். எமது பொருட்களை உற்பத்தி செய்பவர்கள் மீண்டும் நம்மைச் சந்திக்கும்போது நம்மை ஊக்கப் படுத்துவதும் வாழ்த்துவதும் இன்னும் நாங்கள் திறம்படச் செய்ய வேண்டும் என்கின்ற ஆவலை நமக்குத் தருகின்றது. சில வேளைகளில் பல உற்பத்தியாளர்களுக்குச் சந்தைப்படுத்தலில் சவால்கள் இருக்கத்தான் செய்யும். அப்படியான வேளைகளில் நாங்கள் எமது பொருளின் தரத்தை எவ்வாறு கூட்ட வேண்டும் மற்றும் வாடிக்கையாளர்கள் விரும்பும் விதத்தில் அதனை எவ்வாறு மாற்ற வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். சந்தைப் படுத்தலுக்குக் கூட மிகவும் நுட்பமான மாற்று வழிகளை நாங்கள் கண்டுபிடிக்க முடியும். பொருளின் தரம்,அழகான பொதியிடல் காட்சிப்படுத்தல், விற்பனைத் தளம் போன்றன இவற்றில் பெரும் பங்கு வகிக்கின்றது. இப்படியான மிகச்சிறிய விடயங்களை நாங்கள் கவனத்தில் கொள்ளும் போது வாடிக்கையாளர்களை எங்களது பக்கம் ஈர்த்துக் கொள்ள முடியும்.. அத்தோடு தற்போது சிறு கைத்தொழில் அபிவிருத்தி பிரிவினரின் சந்தைப்படுத்தல் கண்காட்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அவற்றின் மூலம் எங்களையும் நமது உற்பத்தி பொருட்களையும் அறிமுகம் செய்வதற்கு மிகவும் அருமையான வாய்ப்பு கிடைக்கின்றது. நாங்கள் பெரும்பாலானவர்கள் அவற்றைத் தவற விடுகிறோம். உண்மையில் எங்களது பொருட்களை அறிமுகப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களைக் கண்டறிவதற்கும் இது ஒரு மிகச்சிறந்த தளமாக இருக்கின்றது இந்த விடயத்தில் நாங்கள் கிளிநொச்சி சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவினருக்கு நன்றியைக் கூறிக் கொள்கின்றோம்.

## எதிர்காலக் கனவுகள்

எல்லா சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் போலவே எனக்கும் எனது ரஞ்சி சிறு கைத்தொழில் உற்பத்திகள் நிறுவனத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றும், இன்னும் பலருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்றும் ஒரு கனவு இருக்கிறது. இன்றும் காணப்படாமல் கிடக்கும் எமது உள்ளூர் வளங்களைப் பெறுமதி சேர்த்து எமது மக்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து ஒரு தொழில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறேன். அவரவர் தத்தமது சிறிய சிறிய தேவைகளுக்குக் கூட இன்னும் அடுத்தவர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையும் ஆண்கள் தான் சம்பாத்தியத்தில் ஈடுபட வேண்டும்என்கின்ற மனோநிலையிலும் மாற்றம்வர வேண்டும். பெண்கள் தமது அத்தியாவசிய தேவைகளையாவது தாமே நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய அளவிற்கு ஒரு சொந்தத் தொழிலில் ஈடுபட வேண்டும். தற்சார்புப் பொருளாதரத்தை மீண்டும் கட்டி எழுப்புகின்ற, யாரிலும் தங்கி வாழாத ஓர் இனமாக நாங்கள் இருக்க வேண்டும் என்பதே எனது அவா என்கிறார் உற்பத்திகள் நிறுவுனர் நடராசா ரஞ்சிதமலர்.



# கல்வி

## எங்கள் வாழ்வும் வளமும்



**- தமிழ்க்கவி -**

“கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக.” இது அவ்வை சொன்னது. கற்றதன் பின் அந்தக்கல்விக்கு தக்க மாதிரி நடந்து கொள்வதற்காகவே கற்க வேண்டும் என்பதான கருத்து. அதாவது ஒழுக்க நூல்களை மட்டுமே கொண்டிருந்த காலத்துக் கல்விபற்றிய கருத்துத்தான் அது. இன்றைக்கு கால் படியும் தேறாத கருத்து. ஆனால், இந்தக்கல்வி எமது வாழ்க்கையில் மட்டும் அல்ல வரலாற்றில் செய்துள்ள சாதனைகள் அதிகம்.

கல்வி எமது மக்களின் மூலதனம். வாழ்வாதாரம். எதிர்காலம். ஒவ்வொரு வீட்டிலும் கல்வி கற்றேயாக வேண்டுமென்ற கட்டாயம். இந்தக்கல்விதான் மக்களின் வாழ்க்கையை தீர்மானிக்கும் மாபெரும் சக்தி. உடலில் தென்பிருக்கிறதோ இல்லையோ கல்வியில் உயர்ந்துவிட்டால் வாழ்க்கை உன்னதமாகிவிடும் என்பது எமது நோக்கம். தோட்டத்தைக் கொத்தி பயிரிட்டு மக்களை கல்வி கற்க வைக்கும் ஒரு தந்தை தன் மகன் தோட்டத்தில் இறங்கி வேலை செய்வதை அனுமதிக்க மாட்டார். “நீ போய்ப்படி உனக்குப் பரீட்சை நெருங்குதெல்லே” என்று விரட்டி விடுவார். அவனது கல்வியை நம்பித்தான் அவனுடைய சகோதரிகளை அவர் பெத்துப் போட்டிருக்கிறார். அவன் படித்து உழைத்து அவர்களைக் கரை சேர்க்க வேண்டும். தன் முழுக்குடும்பத்தையும் கவனித்துத் தன் மக்களையும் கல்வி கற்க வைத்து, இன்னும் ஆடுமாடு வீடு எனச் சம்பாதித்து வைத்திருக்கும் ஒரு தந்தைக்குத் தனது உழைப்பின் மீது மரியாதை இல்லை. அதைத் தன் சந்ததி தொடரக்கூடாது என நினைக்கிறார். காரணம் தனது மகன் கல்வியில் உயர்ந்து ஒரு கவுண்மேந்து உத்தியோகம் பார்க்க வேண்டும். அதாவது சட்டையில் அழுக்குப்படாத வேலை செய்ய வேண்டும் என்பதுதான்.

சென்ற நூற்றாண்டின் அரசியல் அதற்கு வித்திட்டது. மிகத் தனம் படைத்தவர்கள் மட்டுமே படித்துவிட்டுப் பிரித்தானிய அரசின் கீழ் உத்தியோகம் பார்த்து கைநிறைய சம்பாதித்தார்கள். அதுவும் பிரித்தானியர்கள் ஆட்சி செய்த அனைத்து நாடுகளிலும் வேலை வாய்ப்பைப் பெற்றார்கள். அதனால், பல நாடுகாண் பயணங்களும் அவர்களுக்கு வாய்த்தது. அவர்கள் ஊருக்குத் திரும்பி வரும்போது, அழகிய நாகரிகமான ஆடை

அணிமணிகள் வாசனைகள் என வருகின்ற கோலம் கண்டு இங்கிருந்த சாமானிய மக்களுக்கும் அதன்மேல் அவா ஏற்படுவது இயல்புதானே. எமது ஊரில் கோலாலம் பூரிலிருந்து ஸ்டேசன் மாஸ்டராக வேலை பார்த்த ஒருவரின் மகன் வெளிநாட்டிலிருந்து தந்தை அனுப்பிய பணத்தில் நண்பர்களுடன் ஆடம்பரமாகச் செலவிட்டு படிப்பையும் கவனிக்காமல் ஊர்சுற்றினான். விளைவு தந்தை ஊருக்கு வந்ததும் அறுபது வயதில் ஒரு இளம்பெண்ணை விவாகம் செய்து கொண்டார். அவனது ஆடம்பரச் செலவு நின்றது. கல்வியும் இல்லை தொழிலும் இல்லை. பரதேசியாக அலைந்தான். அவனைப்பார்த்த ஊரவர் ஒருவர் சொன்னார். தகப்பன் பக்கத்து ஒழுங்கையில் வரும் போதே சென்ற் வாசனை இங்கே தெறிக்கும் ஸ்டைலான மனிசன் மகனைப்பாத் தீங்களா?

இங்கே இப்போது நடப்பதும் இதுதான் வெளிநாடுகளிலிருந்து வரும் பெருந் தொகைப்பணம் இளைஞர்களின் கல்வியை பாதிக்கிறது. பெரிய விலை கொடுத்து உந் துருளிகளை வாங்கிக் கொண்டு ஊர்சுற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ள இளைஞர்கள் பெருகி வருகிறார்கள்.

யாழ்ப்பாண மண்ணில் விவசாயம் பெருமளவு செய்தாலும் அந்த மண்ணின் வளர்ச்சிக்கு அங்குள்ள மக்களின் கல்வியே காரணம். இப்படி வெளிநாடுகளுக்கு கல்விக்காக சென்ற பெரிய குடும்பத்தினரை தவிர்த்தாலும் ஏனையவர்களும் கல்வி கற்று யாழ்ப்பாண மண்ணுக்கு வெளியே கொழும்பு கண்டி மாத்தறை வரை சென்றும் மலேசியா சிங்கப்பூர் எனவும் சென்று உழைத்தார்கள் அவர்கள் அனுப்பிய மணி ஓடர்களில்தான் யாழ்ப்பாணத்தில் நாற்சார வீடுகளும் கிணறுகளும் கோவில்களும் வானைத் தொட நிமிர்ந்தன என்பது மிகையானது அல்ல. ஆகக் கல்வி ஒரு மூலதனம்.

இந்தக்கல்வியால் சகல ஆண் பிள்ளைகளும் சின்ன வயதிலேயே தமது சுதந்திரத்தை இழந்து படிக்கிறார்கள். அந்தப்பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் எந்த நல்லது கெட்டதும் அனுமதிக்கப்படுவது இல்லை. குடும்பத்துடன் அருகிலே நடக்கும் கலியாணத்துக்கு போகிறவர்கள் அந்தப்பிள்ளையை வீட்டில் அல்லது டியூசன் சென்டரில் விட்டுவிட்டு செல்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால் எங்கள் தெருவில் ஒரு குடிசை தீப்பற்றிக் கொண்டது. ஊரவர்கள் எல்லோரும் ஓடி அந்த தீயை அணைக்க நீரள்ளி ஊற்றினோம் பக்கத்து வீட்டுப்பையனும் ஓடி வந்தான். அவனுடைய தந்தை அவனை அதட்டி "டேய் நீயென்ன நெருப்பை மந்திரத்தில கட்டப்போறியோ போய் உன்ர படிப்பைப் பார் நாங்கள் இவள சனம் போறம்தானே" என்றாரே பார்க்கலாம். பாவம் அந்தப்பையன் மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்தின் எதிர்காலமும்தான். தனது அயலவர்மீது கூட பற்று வைக்கக் கூடாது எனச் சொல்லிக் கொடுத்து வளர்க்கப்படும் பிள்ளைகளின் நிலை இந்த நாட்டை எப்படிக் கொண்டு செல்லப் போகிறது. இதுதான் கல்வி. இன்றைய கல்வி.

> ‘ யாழ்ப்பாண மண்ணில் விவசாயம் பெருமளவு செய்தாலும் அந்த மண்ணின் வளர்ச்சிக்கு அங்குள்ள மக்களின் கல்வியே காரணம். இப்படி வெளிநாடுகளுக்கு கல்விக்காக சென்ற பெரிய குடும்பத்தினரை தவிர்த்தாலும் ஏனையவர்களும் கல்வி கற்று யாழ்ப்பாண மண்ணுக்கு வெளியே கொழும்பு, கண்டி, மாத்தறை வரை சென்றும் மலேசியா, சிங்கப்பூர் எனவும் சென்று உழைத்தார்கள் ’

இந்தக்கல்வி சாதியத்தை உடைத்து பல மக்களின் உயர் வாழ்விற்கு கை கொடுத்துள்ளது. கல்வியால் வென்று உயர்பதவிகளை கைப்பற்றிய பலர் இன்று சமூகத்தில் கௌரவமாக வாழ்கிறார்கள். அடிப்படையில் உயர் சாதியினரால் அவர்களது பதவியை எதுவும் செய்ய முடியவில்லை. மேலும்,

இன்றைய கல்வியின் நிலை மிக மோசமாகத்தான் உள்ளது. பாடத்திட்டத்தில் உள்ளவற்றை ஆசிரியர்கள் கேள்வி பதிலாக அச்சடித்துப் புத்தகமாக விற்பதுடன், அதையே ஒவ்வொரு தனியார் கல்வி நிலையங்களிலும் பாடமாக எடுக்கிறார்கள் பிள்ளைகளும் அவற்றைக் கவனமாகச் சப்பி பரீட்சைப் பேப்பர்களில் துப்புகிறார்கள். அவ்வளவுதான் அதே பிள்ளைகள்தான் எந்தவிதமான சொந்தச் சிந்தனை வளர்ச்சியும் இல்லாமல் வாசிப்பு பழக்கமும் இல்லாமல் புதிய பிள்ளைகளுக்கு கற்பிக்கிறார்கள். கல்வி இதுதான். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் நூலகங்கள் இருக்கின்றன. ஆனால் அங்குள்ள பிள்ளைகளென்ன படிக்கிறார்கள். பாஸ் பேப்பர் புத்தகக் கட்டுகள்தான். அதுவும் சிலருக்குமட்டும்தான். ஆசிரியர்கள் கூட எதுவும் வாசிப்பதில்லை. கேட்டால் "ஆசைதான்" எங்க புத்தகத்தைத் திறந்த உடன நித்திரை வருது என்ன செய்ய"என்கிறார்கள். போதைப் பொருட்களுக்கு எதிரான ஒரு உரையாடல் பிள்ளைகளுக்கு பழக்க வேண்டும் என்பதற்காக என்னை அணுகிய ஆசிரியைக்கு நான் சில கேள்விகளைப் போட்டேன். அவள் வெட்கத்துடன்,

"எங்கயுங்கோ எங்களுக்குப் பாடசாலை நேரம் முடிஞ்சாலும் எங்கட வேலையள் அசைன்மன்றுகள் முடியாமகிடக்கே அதோட வீட்டு வேலையும். படிக்கிறதுக்கு நேரமில்லையே ப்ளீஸ் எழுதித்தாங்க."

எமக்கென ஒரு தொழிலைத் தொடங்கி அதிலிருந்து நாம் முன்னேறக்கூடிய கல்வி எதுவும் இல்லை பாடசாலைகளிலும் தொழிற் கல்வி இல்லை. ஏயெல் படித்து முடித்த ஒரு பெண்ணிடம் ஐம்பது நெல்லுச் சாக்குகளை நிறை போட்டு விட்டு மொத்தக்காசை கணக்கிடச் சொன்னால் உந்த வகைக் கணக்குகள் நான் படிக்கவில்லை என்கிறாள். லண்டனில் படிக்கும் ஒரு பத்தாம் வகுப்பு மாணவன் தாய் வெளியே போனபின் அன்றைய சமையலை அருமையாகச் சமைத்தான். ஆச்சரியப்பட்டுப் போனேன். அவனுடைய அக்கா சொன்னாள். 'அது அவனுக்கு வகுப்பில் ஒரு பாடம்' என்று. வீட்டில் ஏற்படும் வயறிங் பிளம்பிங் திருத்த வேலைகளை ஒரு வீட்டில் பெண்பிள்ளையே செய்து விடுகிறாள். கேட்டால் அது அவளுக்குப் பயிற்சியாக முடியுமாம். அவள் படிக்கும் துறை அது. நம் மூரில் எத்தனை பெற்றோர் பிள்ளைகளுக்கு இதை அனுமதித்துள்ளோம். வியப்பாக இல்லை.



# குறைந்த காலத்திலேயே அதிகளவுக்கு இலாபம் தரும் உளுந்து பயிர்ச் செய்கை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



மூன்று மாத காலத்தில் அதிக இலாபம் தரும் பணப் பயிர்களில் இதுவும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

அதோடு சந்தை வாய்ப்புப் பற்றி ஐயம் கொள்ளத் தேவையில்லை.

பல நாடுகளில் உளுந்து உற்பத்தி செய்யப்பட்டாலும்

தென்னிந்தியாவிலேயே அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

உளுந்து இரகங்களில் பல இரகங்கள் உள்ளன. இருப்பினும் அதிக விளைச்சலை தரக்கூடிய நாட்டு இரகங்களை தேர்ந்தெடுத்து நடுகை செய்வதே சிறந்தது.

உளுந்தை பொறுத்தவரை கார்த்திகை மாதத்தில் அதிகளவு பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது.

சித்திரை மாதத்திலும் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது. இருப்பினும் சித்திரை மாதத்தில் விளைச்சல் சற்று குறைவாக இருக்கும்.

அதோடு சித்திரை மாதங்களில் பயிரிடப்பட்டால் அதிகளவான நீர்க் கட்டமைப்பு தேவைப்படும் என்பதனாலே அதிகளவான விவசாயிகள் கார்த்திகை மாதங்களில் நடுகை செய்கின்றார்கள்.

விதைப்பு முறை மூலமே உளுந்து பயிரிடப்படுகின்றது.

ஒரு ஏக்கரில் உளுந்து நடுவதாக இருந்தால் 7 தொடக்கம் 10 கிலோ உளுந்து விதைகள் தேவைப்படும்.

ஒரு ஏக்கருக்கு 10 டன் தொழுவுரம் இட்டு களைகள் இல்லாமல் இரண்டு அல்லது மூன்று முறை உழுது விதைக்க வேண்டும்.

ஒவ்வொரு உழவின்போதும் ஏழு நாட்கள் இடைவெளி விட்டு உழவு செய்ய வேண்டும்.

உளுந்தானது மணல் மண், சரளை கற்கள் நிறைந்த மண், களிமண் போன்ற நிலங்கள் தவிர்த்து ஏனைய நிலங்களில் நடுகை செய்யலாம். குறிப்பாக செம்மண், இருவாட்டி மண், மக்கிய மண் போன்ற நிலங்களில் விளைச்சல் சிறப்பாக இருக்கும்.

உளுந்து விதைப்பதற்கு முன்பு ஜீவாமிர்தம் அல்லது பஞ்சகாவியா வில் இரண்டு மணிநேரம் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் எதிர்காலத்தில் வேர் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் இருக்கும்.

அத்தோடு முளைப்புத்திறன் அதிகமாக இருக்கும்.

உளுந்து விதைத்து 25 நாட்களுக்கு பிறகு பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும்.

இந்த நேரத்தில் மாலை வேளையில் தேமோர் கரைசலைப் பயன்படுத்த வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டு அதிகளவில் காய்க்க ஆரம்பிக்கும்.

உளுந்து விதைத்த 20 ஆவது நாளில் களைகளை அகற்றி மண் அணைக்க வேண்டும்.



“உளுந்து மூன்று மாத பயிராக இருந்தாலும் உளுந்து விதைத்து 75 முதல் 80 நாட்களுக்குள் அறுவடைக்குத் தயார் ஆகிவிடும். அறுவடை செய்து விற்பனைக்கு தயாராவதற்கு 90 நாட்கள் ஆகிவிடும். முடிந்தவரை காய்கள் நன்றாக முற்றிய பின்பு அறுவடை செய்ய வேண்டும். மாறாக இளம் பச்சை நிறத்தில் இருக்கும்போது அறுவடை செய்தால் விதைகளில் சுருக்கம் ஏற்பட்டுச் சந்தை வாய்ப்பினை இழக்க நேரிடும். அதிகபட்ச விளைச்சலாக ஏக்கருக்கு 500 கிலோ வரை கிடைக்கும்.”

வாரத்தில் ஒரு தடவையேனும் தண்ணீருடன் ஜீவாமிர்தத்தைக் கலந்து பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் செடிகள் மிக விரைவாகவும் ஆரோக்கியமாகவும் வளர ஆரம்பிக்கும்.

அத்தோடு இலைகள் மஞ்சளாக மாறுவது தடுக்கப்பட்டு பச்சையம் அதிகரிக்கும்.

உளுந்து மூன்று மாதப் பயிராக இருந்தாலும் உளுந்து விதைத்து 75 முதல் 80 நாட்களுக்குள் அறுவடைக்குத் தயார் ஆகிவிடும்.

அறுவடை செய்து விற்பனைக்குத் தயாராவதற்கு 90 நாட்கள் ஆகிவிடும்.

முடிந்தவரை காய்கள் நன்றாக முற்றிய பின்பு அறுவடை செய்ய வேண்டும். மாறாக இளம் பச்சை நிறத்தில் இருக்கும்போது அறுவடை செய்தால் விதைகளில் சுருக்கம் ஏற்பட்டுச் சந்தை வாய்ப்பினை இழக்க நேரிடும்.

அதிகபட்ச விளைச்சலாக ஏக்கருக்கு 500 கிலோ வரை கிடைக்கும்.

உளுந்துப் பயிரை அதிகமாகத் தாக்கும் பூச்சிகள் இரண்டு.

ஒன்று இலைகளை உண்ணும் புழுக்கள். இரண்டாவது சாறு உறிஞ்சும் பூச்சிகள்.

இவற்றைக் கட்டுப்படுத்த ஆரம்பம் முதல் கற்பூரக் கரைசல் அல்லது அக்கினி அஸ்திரா போன்ற இயற்கைக் கிருமி நாசினிகளை தெளித்து

வந்தால் பூச்சி தாக்குதலை முற்றிலும் தவிர்க்கலாம்.

மற்றும் அளவுக்கு அதிகமாகப் பூக்களை பெறலாம்.

மீண்டும் சித்திரை மாதத்தில் உளுந்து நடுவதாக இருந்தால் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கற்பூரக் கரைசலை தவிர்த்து மூலிகைக் கரைசலை அல்லது அக்கினி அஸ்திரா போன்ற இயற்கைக் கிருமி நாசினிகளைப் பயன்படுத்த வேண்டும்.

மூன்று மாத காலத்தில் அதிக லாபம் தரும் பணப் பயிர்களில் இதுவும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

அதோடு சந்தை வாய்ப்புப் பற்றி ஐயம் கொள்ளத் தேவையில்லை.

உளுந்துக்கு எப்போதும் கேள்வி உள்ளது.

உளுந்தினை அறுவடை செய்து நேரடியாக விற்பனை செய்யாமல்.

மாறாக இரண்டாக உடைத்து விற்பனை செய்தாலே அதிக இலாபத்தினைப் பெறலாம்.





- சாண்டில்யன் -

> “அமெரிக்கா, லண்டனைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களின் கூட்டு ஆய்வானது மகரந்தச்சேர்க்கைக்கு உதவும் பூச்சி இனங்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால் பழங்கள், காய்கறிகளின் உற்பத்தி உலக அளவில் குறையும் என்று தெரிவிக்கிறது. இதன் காரணமாக உலகின் பெரும்பாலான இடங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடும், அதனால் ஏற்படும் நோய்கள் சம்பந்தப்பட்ட மரணங்களும் அதிக அளவு நிகழும் சாத்தியக் கூறுகள் உள்ளன.”

# நாம் ஏன் பூச்சிகளைப் பாதுகாக்க வேண்டும்?



பூச்சிகள் என்றதும் நம் மனதில் தோன்றுவது விவசாயப் பயிர்களுக்கும் உணவுப் பொருள்களுக்கும் அவை இழைக்கும் தீங்குகளே. இருப்பினும், வேளாண் பயிர்களுக்குத் தீங்கு இழைக்கும், அதாவது Pest என்ற வரையறையின் கீழ் வரும் பூச்சிகளின் வகைகள் மிகக் குறைவு. நன்மைசெய்யும் பூச்சிகள் இருந்தால் மட்டுமே வேளாண் உற்பத்தியும் காடுகளின் பரப்பளவும் அதிகரிக்கும். தாவரம், பூச்சிகளுக்கு இடையிலான சார்புநிலையைச் சூழலியல், பரிணாம வளர்ச்சியின் கண்ணோட்டத்துடன் பார்த்தால் நமக்குப் பூச்சிகளைப் பற்றிய வேறு ஒரு புதிய புரிதல் கிடைக்கும்.

தாவரங்களுக்கும் பூச்சிகளுக்கும் இடையிலான உறவு என்பது 40 கோடி ஆண்டுகள் பழமையானது. மகரந்தச் சேர்க்கைக்காகப் பூச்சிகளைக் கவர்ந்து இழுப்பதற்குப் பல வேதிப்பொருள்களைத் தாவரங்கள் உற்பத்தி செய்கின்றன. அதே நேரத்தில் இலை, பூ, பழம், விதை, வேர் போன்ற பாகங்களைச் சேதப்படுத்தும் பூச்சிகளிடமிருந்து தன்னைத் தற்காத்துக்கொள்ளவும் தாவரங்கள் பல்வேறு வகையான வேதிப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன.

இந்த இரண்டு வகை வேதிப்பொருள்களும் வளர்சிதை மாற்றப் பொருள் (metabolites/phytochemicals) என்றே அழைக்கப்படுகின்றன. வளரும் நாடுகளில் உள்ள 70 முதல் 95 சதவீத மக்கள் இன்றளவும் பாரம்பரியத் தாவர மருந்துகளையே நோய் நிவாரணியாகப் பெரிதும் நம்பி உள்ளனர். தாவர மருந்து என்பது பெரும்பாலும் பூச்சிகளின் தாக்குதலிலிருந்து தாவரம் தன்னைக் காத்துக்கொள்ள உற்பத்தி செய்யும் வளர்சிதை மாற்றப் பொருள்களே.

### அழியும் பூச்சிகள்

பூமியில் பூச்சி இனங்கள் தோன்றி 40 கோடி ஆண்டுகள் ஆகிவிட்டன. பூமியில் நிகழ்ந்த கடைசி இரண்டு இயற்கைப் பேரழிவுகளிலும் தப்பிப் பிழைத்த ஓர் இனமா



கப் பூச்சிகள் உள்ளன. டைனசோர் காலத்தில் வாழ்ந்த பல பூச்சிகள் (தும்பி, சிலந்தி, ராமபாணப் பூச்சி -Silver Fish) இன்றும் நம்முடன் பூமியில் வாழ்கின்றன. இதுவரை பூமியில் 10 இலட்சம் பூச்சி இனங்கள் இருப்பதாக அறியப்பட்டுள்ளன. இருப்பினும், 1.5 லட்சம் பூச்சி இனங்கள் மட்டுமே இதுவரை அறிவியல் பூர்வமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட இனங்களில் 40 சதவீதம் வண்டு இனங்களே.

1930க்குப் பிறகு உலகம் முழுவதும் பூச்சி இனங்கள் அதிவேகமாகக் குறைந்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். உலகம் முழுவதும் அறியப்பட்ட பூச்சி இனங்களில் 40% அழிவின் விளிம்பில் உள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

## பூச்சி இல்லாத உலகு

உலகில் உள்ள 75% விவசாயத் தாவரங்களும் 90% காட்டுத் தாவரங்களும் மகரந்தச் சேர்க்கைக்காகப் பூச்சி இனங்களையே நம்பியுள்ளன. பூச்சிகள் வெகுவாக



அழியும் பட்சத்தில் விவசாய உற்பத்தியானது பெரும் இழப்பைச் சந்திக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதன் வளர்ச்சியும் (GDP) ஈடுகட்ட முடியாத சரிவுகளைச் சந்திக்கும் இதன் தொடர்ச்சியாக உணவுப் பொருள்களின் விலை உச்சம் தொடும். மகரந்தச் சேர்க்கையாளர்கள் (pollinators) என்று சொல்லப்படும் பூச்சி இனங்கள் இல்லை எனில், இந்த உலகமானது மிகப் பெரிய உணவுப் பஞ்சத்தில் சிக்கிக் கொள்ளும்.

அது போலவே பல்வேறு தாவர இனங்களின் இருப்பு என்பது நிச்சயமற்றதாகி விடும். மரங்களின் இழப்பு என்பது சூழலியல் தொகுதிகளிலும் பருவநிலை சுழற்சியிலும் எதிர்மறை விளைவுகளைப் பெரிய அளவில் உருவாக்கும். இது தவிர இயற்கை உணவு சங்கிலிகளில் பூச்சிகளின் முக்கியத்துவம் மிகவும் வலுவானது. இந்த இனம் அழியும் பட்சத்தில் சூழலியல் மண்டலங்களின் உறுதிப்பாடு சிதைந்துவிடும். இவை அனைத்திற்கும் மேலாகப் பல வழிகளில் மனிதக் குலம் சிறக்கப் பூச்சிகள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

## விவசாயத்தில் பூச்சிகள்

2022இல் அமெரிக்கா, லண்டனைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களின் கூட்டு ஆய்வானது மகரந்தச்சேர்க்கைக்கு உதவும் பூச்சி இனங்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால் பழங்கள், காய்கறிகளின் உற்பத்தி உலக அளவில் குறையும் என்று தெரிவிக்கிறது.

இதன் காரணமாக உலகின் பெரும்பாலான இடங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடும், அதனால் ஏற்படும் நோய்கள் சம்பந்தப்பட்ட மரணங்களும் அதிக அளவு நிகழும் சாத்தியக்கூறுகள் உள்ளன. சுமாராக 4,27,000 மரணங்கள் இந்த வகையில் நிகழலாம் என்று அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

தற்சார்பு, நிலைத்த விவசாயம் பற்றிப் பேசும் நாம் இன்றளவும் அதற்குப் பெரிதும் உதவும் பூச்சிகளின் முக்கியத்துவம் பற்றி அறியாமல் இருப்பதும், அவற்றைப் பாதுகாக்க முயற்சிகள் எடுக்காமல் இருப்பதும் வேதனைக்குரிய விஷயமே.

## மருந்து வகைகள்

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள பழங்குடியின மக்கள் இன்றளவும் பல நோய்களுக்கு நிவாரணமாகப் பூச்சிகளையே நம்பி உள்ளனர். பூச்சிகளின் உடம்பில் உள்ள பல வேதிப்பொருள்கள் மருத்துவ குணம் நிரம்பியதாக உள்ளன. இது தொடர்பாக மருந்தியல் சார்ந்த பூச்சியியல் (pharmaceutical entomology) என்று ஒரு தனித் துறையே செயல்பட்டு வருகிறது. இதுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட வேதிப் பொருள்களைப் பூச்சிகளின் உடலிலிருந்து பிரித்து எடுத்து, அதன் மருத்துவப் பயனை



ஆராய்ந்து வருகிறார்கள்.

## பூச்சிகளைப் பாதுகாக்க

பல நன்மை பயக்கும் பூச்சிகள் இவ்வுலகில் உள்ளன. அவை பல்வேறு வழிகளில் மனிதர்களுக்கும் தாவரங்களுக்கும் சூழலியல் மண்டலங்களுக்கும் பெரும் நன்மைகளைச் செய்துவருகின்றன. ஆனால், நம்முடைய தவறான வேளாண் கொள்கைகள் (வேதி உரம், பூச்சிக் கொல்லிகளை இடுதல்), காடுகளை அழித்தல், நகரமயமாதல், ஒளி மாசு, நீர்நிலைக



ளில் ஏற்படும் மாசு, காலநிலை மாற்றம் போன்றவை பூச்சி இனங்களுக்குப் பெரும் பாதிப்புகளை உருவாக்கி வருகின்றன.

கொள்கை ரீதியாகப் பல முடிவுகளை எடுக்கவேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம். அரசுகள் இணைந்து அழியும் நிலையில் உள்ள பூச்சிகள் பற்றிய பட்டியலைத் தயாரித்து வெளியிட வேண்டும். பூச்சிகளுக்கு நேரடியாகத் தீங்கிழைக்கும் வேதிப் பூச்சிக்கொல்லிகள், நீர்நிலை மாசு போன்ற பிரச்சினைகளுக்குத் தகுந்த அறிவியல் பூர்வமான தீர்வு காணப்பட வேண்டும். ஆதார உயிரினங்களான சிங்கம், புலி, யானை போன்றவற்றைப் பாதுகாக்கக் கொடுக்கும் அதே அளவு முக்கியத்துவத்தைப் பூச்சிகளைப் பாதுகாப்பதற்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்கங்கள் மட்டுமின்றி மக்களாகிய நாமும் சில முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். குறிப்பாக, நமது வீடுகளைச் சுற்றி அதிகம் வண்ணப் பூக்கள் பூக்கும் செடிகளை வளர்ப்பதன் மூலமும் அதிக ஒளி உமிழும் விளக்குகளை வெளிப்பகுதிகளில் தவிர்ப்பதன் மூலமாகவும் பல பூச்சி இனங்களைப் பாதுகாக்கலாம்.

# கால்நடை வளர்ப்பில் தரவுகளை முறையாகக் கையாளும் இஸ்ரேல்





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

கடந்த வாரம் முதல் இஸ்ரேல் நாட்டின் முன்னேற்றகரமான கால்நடை வளர்ப்புத் துறை தொடர்பாக எழுதிவருகின்றேன். இந்த வாரமும் அதன் தொடர்ச்சியே.

எந்த ஒரு விடயத்திலும் கையிருப்பிலுள்ள தரவுகள் மிக முக்கியமானவை. இருக்கும் விடயங்களை முகாமை செய்வதையும் எதிர்கால விடயங்களைத் திட்டமிடுவதையும் எம்மிடமுள்ள தரவுகளே தீர்மானிக்கும். சரியான தரவுகள் சரியான இலக்கை அடையச் செய்யும் கருவிகள். இஸ்ரேலின் கால்நடை வளர்ப்பில் அவர்களின் தரவுகளின் முகாமைத்துவம் சிறப்பானது. மிகமிகச் சிறிய விடயங்களும் பதிவு செய்யப்பட்டு அவற்றை பகுப்பாய்வு செய்து அடுத்த கட் டத்துக்கு நகர்கிறார்கள்.

கால்நடை வளர்ப்பின் முக்கிய தரவுகளான மாடுகளின் எண்ணிக்கை, பண்ணைகளின் எண்ணிக்கை, பாலுற்பத்தி என்பவற்றைத் தாண்டி மிக நுண்ணிய தரவுகளும் பதிவு செய்யப்படுகின்றன.

உதாரணமாக மாடுகளின் உடல் வெப்பம், நடக்கும் அடிகள், சுவாச வீதம், இதயத் துடிப்பு, இனப்பெருக்க ஓமோன்களின் மாறுதல்கள் எனச் சகலதும் உடலின் பல பாகங்களில் பொருத்தப்பட்டுள்ள சென்சார்கள் உணர்ந்து மத்திய வலையமைப்புக்குத் தகவல் சொல்லுகின்றன.

இதன் மூலம் மாடுகள் நோய்ப்பட்டதை அறிய முடியும். அவற்றின் அசௌகரியங்களை உணரமுடியம். இனப்பெருக்க ஓமோன்களின் மாறுதல்களை அவதானிப்பதன் மூலம் சரியான சினைப்படுத்தல் தருணத்தை அறிய முடியும். இதனால் சினைப்படுத்தல் தருணங்கள் தவறவிடப்படுவது தவிர்க்கப்படுகிறது. உடனடியாக செயற்கை முறைச்சினைப்படுத்துனர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டுச் சினைப்படுத்தப்படுகிறது.

எமது நாடுகளில் பெரும்பாலும் வெளிப்படையான சினை அறிகுறிகளை அவதானித்த பின்னர் தான் செயற்கை முறைச் சினைப்படுத்துனர்களை உரிமையாளர்கள் அழைப்பார்கள். இதனால் சினைப்படுத்தல் வெற்றி வீதம் 30%ஐ விடவும் மிக மிகக் குறைவானதே. அதிகளவில் தருணம் பிந்திய சினையூட்டல்களே நிகழ்கின்றன. இதனால் பண்ணையாளர்களுக்கு மேலதிகப் பராமரிப்புச் செலவு ஏற்படுகிறது.

மேலும் நோய் அறிகுறிகள் தென்படும் ஆரம்ப நாட்களிலேயே சென்சார்கள் நோயை இனங்கண்டு மத்திய வலையமைப்புக்கு அறிவித்து விடும். அத்துடன் மாடுகளின் பண்ணை அமைந்துள்ள கால்நடை மருத்துவ அதிகாரிகளுக்கும் அறியப்படுத்தப்படுவதால் நோய் தீவிரமடைய முன்னே முறையான சிகிச்சை வழங்கப்பட்டுவிடும். இதனால் தேவையற்ற விதத்தில் நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் பாவிக்கப்படுதலும் தவிர்க்கப்படுகிறது.

இந்த மாதிரியான சென்சாருடனான செயற்கை நுண்ணறிவு விடயங்களுக்கு





இஸ்ரேல் நிறுவனங்கள் முன்னோடிகளாகும். இன்று இந்த நவீன கால்நடை சென்சார்களை உலகம் முழுதும் அவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கால்நடைகள் பற்றிய தரவுகள் அவை தொடர்பான ஒரு புத்தகத்தில் (Israeli breeding and herd book) பதியப்படுகிறது. இது வருடாந்தம் அங்குள்ள பசுமாடுகள், காளைகள், பண்ணைகள் தொடர்பான விடயங்கள், மாடுகளின் அளவு என்பவற்றின் துல்லிய விபரங்களைத் தாங்கி நிற்கும் பதிவேடாகும். இதனைக் கால்நடை விஞ்ஞானிகள், கால்நடை வைத்தியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சினைப்படுத்தும் நிறுவனம், கால்நடைப் பண்ணை யாளர் சங்கங்கள், அரசு என சகல தரப்பின் பிரதி நிதிகளும் இணைந்து தயாரிப்பதுடன் புதிய தகவல்களைத் தரவேற்றமும் செய்கிறார்கள்.

இஸ்ரேலிய அரசு சார்பாக இஸ்ரேலிய கறவை மாடுகள் சபை (Israeli dairy board) செயற்படுகிறது. இந்த அமைப்புத் தான் கால்நடை உற்பத்தி, கறவை மாடுகள் தொடர்பான சட்டங்களை இயற்றுதல், கொள்கை முடிவுகளை எடுப்பதை நடுநாயகமாக நின்று செய்கிறது.

இந்தத் தரவுகள் பதிவு விடயத்தில் இலங்கை மிக மிகப் பின்னே நிற்கிறது. துல்லியமான தரவுகள் சேகரிக்கப் படுவதில்லை. இலங்கையிலுள்ள சகல மாடுகளும் காதடையாளமிடப்பட்டு பதியப்படவும் இல்லை. தற்போது வழங்கப்படும் எண்ணிக்கை, பாலுற்பத்தி விடயங்களும் ஒரு அனுமான அடிப்படையான தகவல்களே. இயங்கும் பண்ணைகள் இயங்காத பண்ணைகளின் துல்லிய தரவுகள் இல்லை.

கால்நடை உற்பத்தியின் அடிப்படை அலகான கால்நடை வைத்திய அலுவலகங்கள் தான் இந்தத் தரவுகளை வழங்க வேண்டும். எனினும் அந்த அலுவலகங்களில் இந்தத் தரவுகளை எடுக்கத்தக்க ஆளணிகள் சரிவர வழங்கப்படவில்லை என்பது மிகப்பெரிய பின்னடைவே.

இஸ்ரேல் அரசு ஆராய்ச்சிகளுக்கென சிறப்பு நிதிகளைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அமைப்புகளுக்கு அதிகமதிகம் ஒதுக்குகிறது. இதனால் பல புதிய ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் தினமும் நிகழ்கின்றன. இது கால்நடை வளர்ப்புக்கும் பொருந்தும். இப்படியாக இஸ்ரேலின் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகள் தான் அந்த நாட்டைப் பல துறைகளில் உலகின் முன்னோடியாக மாற்றியுள்ளது எனலாம். அடுத்த வாரமும் இஸ்ரேல் நாட்டின் கால்நடை உற்பத்தியின் மற்றுமோர் விடயத்தை ஆராய்வோம்.

**“ இஸ்ரேல் அரசு ஆராய்ச்சிகளுக்கெனச் சிறப்பு நிதிகளைப் பல்கலைக் கழகங்கள் மற்றும் அமைப்புகளுக்கு அதிகமதிகம் ஒதுக்குகிறது. இதனால் பல புதிய ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் தினமும் நிகழ்கின்றன. இது கால்நடை வளர்ப்புக்கும் பொருந்தும். இப்படியாக இஸ்ரேலின் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகள்தான் அந்த நாட்டைப் பல துறைகளில் உலகின் முன்னோடியாக மாற்றியுள்ளது. ”**





வேதநாயகம்
தபேந்திரன்



# கோடிகள் தேவையில்லை

"அவருக்கென்ன கோடி கோடியாய்க் காசு வச்சிருக்கிறார். தாராளமாக அள்ளிக் கொடுக்கிறார்."

இப்படியொரு உரையாடலைப் பல இடங்களிலும் கடந்து போகின்றோம். காசு,பொருள் கொடுப்பவர்களை வள்ளல் என்கின்றோம்.

அவற்றைக் கொடுக்க வழி இல்லாதோரும் வள்ளல் ஆகலாம். இது பலருக்குப் புரிவதில்லை.

வள்ளலாக மனநிறைவுடன் வாழும் வழிகள் பல உள்ளன.

திறமையும் தகுதியும் உள்ள ஒரு மாணவனுக்கு நல்லதொரு பாடசாலையில் கற்க அனுமதி பெற்றுக் கொடுக்கலாம்.

அயல்வீட்டுப் பிள்ளை சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் படிப்பதற்குப் பாடத்தெரிவு தொடர்பாகத் தெளிவற்ற நிலையில் உள்ளபோது கல்வி அறிவு குறைந்த அப் பெற்றோருக்கு பொருத்தமான தகவலைக் கூறி வழிகாட்டலாம்.

உயர்தரம் படித்துப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதபோது உயர்கல்வியைப் பெறுவதற்குரிய வாய்ப்புகள், அரச பதவிப் போட்டிப் பரீட்சைகள் மூலமாக தொழில் வாய்ப்புகள் பெறுவதற்கு வழி காட்டலாம்.

உங்கள் வீட்டிலிருந்து நகரப் பிரதேசத்திற்கு வேலைக்குப் போகின்றீர்கள். அயல் வீட்டுப் பிள்ளை பஸ்சில் ஏறி நகரப் பாடசாலைக்குப் போகலாம். நீங்கள் உங்கள் வீட்டிலுள்ள ஹெல்மட்டை எடுத்துக் கொண்டு அந்தப் பிள்ளையைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்று விடலாம்.

அது போல நீங்கள் தனி ஓர் ஆளாக மோட்டார் சைக்களில் பயணம் செய்யும் போது கையில் பொதிகள் ஏதும் இலலாத பிரச்சினை இல்லாத ஆளாகப் பார்த்து ஏற்றிச் சென்று உங்கள் பாதையில் இறக்கி விடலாம்.

வழியில் ஒரு மோட்டார் சைக்கிள் பழுதுபட்டு ஒருவர் துன்பப்படலாம். உங்களுக்கு நேரம் இருக்குமாயின் அவருக்கு உதவலாம்.

மழைக் காலத்தில் உங்கள் இடத்தில் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் நின்று பொதுப் போக்குவரத்துக்கு இடையூறாகலாம்.

அயலவர்களுடன் சேர்ந்து வெள்ளநீர் வழிந்தோடச் செய்யலாம். ஊரில் வீதியோரம் பற்றைகள் வளர்ந்து விச ஜந்துகள் மனிதருக்கு இடையூறு செய்யலாம்.

பற்றைகளை வெட்டித்துப்பரவாக்குவதற்கு உள்ளூராட்சி நிறுவனத்திற்குத் தகவல் தெரிவிக்கலாம்.

உங்களது பிரதேசத்தில் கடுமையாகச் சேதமடைந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு அப் பிரதேசவாசிகளிடம் கையெழுத்து வாங்கி உரிய அரச நிறுவன உயரதிகாரியைச் சந்தித்துத் தேவையை விளங்கப்படுத்தி மகஜரைக் கையளிக்கலாம்.

ஊரில் சனசமூக நிலையம், கோயில், தேவாலயம், கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சம்மேளனம், சிக்கனக் கூட்டுறவுக் கடனுதவிச் சங்கம் போன்ற அமைப்புகளின் நிர்வாக சபையில் உறுப்பினராக இருந்து அல்லது பொருத்தமான பதவி ஒன்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓய்வு நேரங்களில் பல சேவைகளை வழங்கலாம்.

உங்களால் கற்பிக்கக் கூடிய பாடங்களைத் தயார் செய்து ஓய்வு நேரங்களில் வசதி குறைந்த பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம்.

ஓய்வு நேரத்தில் சமூக வலைத் தளங்களுடன் அரை மணி நேரமோ அல்லது ஒரு மணி நேரமோ செலவிட்டுச் சமூகத்திற்குத் தேவையான சமகாலத் தகவல்களை எழுதி வழங்கலாம்.

உதாரணம் - சட்டபூர்வமாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வது எப்படி? ,தேசிய அடையாள அட்டை பெறுதல், கடவுச்சீட்டு பெறுதல். தரமான பொருள்களை விலை மலிவாக எங்கு பெறலாம். சிறுகைத் தொழில் அல்லது வாழ்வாதார முயற்சிகள் தொடர்பான தகவல்.

சமூக வலைத்தளங்களில் பிறரால் எழுதி வழங்கப்படும் சமூக நன்மை பயக்கும் தகவல்களைப் பகிர்தல், அல்லது பிரதி செய்தல்.

சந்தைக்குப் பொருள்கள் வாங்கத் தனியாகச் செல்கின்றோம். அப்போது அயலில் உள்ள முதியோர், உடல்வலு இல்லாதவர்களின் உற்பத்திப் பொருள்களை எடுத்துச் சென்று நியாயமான விலைக்கு விற்பனை செய்து காசை வழங்குதல். அவர்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுத்து உதவுதல்.

அறம்சார்ந்த கருத்துகள், நல்ல பண்புகள் ஆகியவற்றை முன்பள்ளி,ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து உதவுதல்.

அறம்சார்ந்த வாழ்க்கை முறையில் வாழ்வதன் அவசியம், பிறருக்குத் தீங்கு இல்லாமல் வாழ்வதே நாம் செய்யும் பெரும் புண்ணியம் போன்ற கருத்துகளை பொதுச் சமூகத்திற்கு நயமாக எடுத்துரைத்தல்.

மரம் நடுகை, பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை குறைந்த நல்லதோர் சுற்றாடல் போன்றவற்றைச் சமூகத்திற்கு உரைத்தல். சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வின் ஊடாக எமது பூமியைப் பாதுகாத்தல்.

மூத்தோர்,மாற்றுத்திறனாளிகள்,ஆதரவற்றோர், குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும்பெண்கள், குடும்பங்கள்போன்றோரின் வாழ்க்கைத் தர உயர்வுக்கு வழிகாட்டுதல். அவர்களுக்குரிய மதிப்பை பொதுச் சமூகம் வழங்குவதை உறுதி செய்தல்.

வள்ளல் என்ற பெயர் எடுக்க இப்படிப் பல வழிகள் உள்ளன.




(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீர்திருத்தங்களைச் செயற்படுத்த முடிந்தால் நீண்ட கால அடிப்படையில் ரூபாயின் மதிப்பு உயர வாய்ப்புள்ளது.

இந்தச் சூழலில் பொதுமக்கள் மற்றும் வணிகச்சமூகம் என்ன செய்ய வேண்டும்?

இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவுவதில் பொது மக்களும் வர்த்தகச் சமூகமும் முக்கிய பங்கு வகிக்க முடியும். அவர்கள் செய்யக் கூடிய சில விடயங்கள் சில:

- அரசாங்கத்தின் சீர்திருத்த முயற்சிகளுக்கு ஆதரவு: இலங்கை அரசாங்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியம் என நம்புகின்ற பல சீர்திருத்தங்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. பொது மக்களும் வணிக சமூகமும் தங்களுக்கு ஆதரவாகப் பேசுவதன் மூலமும் சீர்திருத்தங்கள் வெற்றிபெறத் தியாகம் செய்யத் தயாராக இருப்பதை அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்துவதன் மூலமும் இந்த சீர்திருத்தங்களை ஆதரிக்க முடியும்.
- பொறுமையும் புரிதலும் இருக்க வேண்டும்: இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு சிக்கலான பிரச்சினையாகும். மேலும் நாடு மீண்டு வருவதற்கு காலம் எடுக்கும். அரசாங்கம் சீர்திருத்தங்களைச் செயற்படுத்தும்போதும் பொருளாதாரம் மெதுவாக மீண்டு வரும்போதும் பொதுமக்களும் வணிக சமூகமும் பொறுமையுடனும் புரிதலுடனும் இருக்க வேண்டும்.
- தேவைப்படுபவர்களுக்கு உதவி பெற்றுக்கொடுத்தல்: இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது பலருக்கு பெருமளவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பொது மக்கள் மற்றும் வணிக சமூகம் தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்குவதன் மூலமும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, தங்கள் நேரத்தைத் தன்னார்வமாக வழங்குவதன் மூலமும் தேவைப்படுபவர்களுக்கு உதவலாம்.
- இலங்கையில் முதலீடு: இலங்கையின் நீண்டகால மீட்சியானது முதலீட்டைச் சார்ந்தது. பொது மக்களும் வர்த்தக சமூகமும் நாட்டிற்கு ஆதரவாகப் பேசுவதன் மூலமும் இலங்கையில் உள்ள வர்த்தகங்களில் முதலீடு செய்வதன் மூலமும் இலங்கைக்கு முதலீட்டை ஈர்க்க உதவ முடியும்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பொது மக்களும் வர்த்தக சமூகமும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, நாட்டிற்கு மிகவும் வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப உதவ முடியும்.

பொதுமக்கள் செய்யக்கூடிய குறிப்பிட்ட விடயங்கள் சில:

- பொதுமக்கள் நுகர்வினைக் குறைக்க வேண்டும்: இது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவையைக் குறைக்க உதவும். இது நாட்டின் பொருளாதார அழுத்தத்தைக் குறைக்க உதவும்.
- பணத்தினைச் சேமிப்பதற்கு ஊக்குவித்தல்: இது நிதி இருப்புக்களை உருவாக்க உதவுதலுடன், எதிர்காலத்தில் பொருளாதாரச்சவால்களினை இலகுவாகக் கையாள்வதற்குச் சாதகமாக இருக்கும்.
- உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவு: இது பொருளாதாரத்தை உயர்த்தவும் வேலைகளை உருவாக்கவும் உதவும்.
- பொறுமையாக இருங்கள் மற்றும் புரிந்து கொள்ளுங்கள்: பொருளாதார நெருக்கடி ஒரே இரவில் தீர்க்கப்படாது. எனவே நாடு மீண்டு வருவதற்கு பொறுமையும் புரிந்துகொள்ளுதலும் அவசியம்.

வணிக சமூகம் செய்யக்கூடிய சில குறிப்பிட்ட விடயங்கள்:

- இலங்கையில் முதலீடு செய்தல்: இது வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் பொருளாதாரத்தை உயர்த்தவும் உதவும்.
- நிலையான வணிக நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளுதல்: இது நாட்டின் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கும் முதலீட்டாளர்களை மிகவும் கவர்ந்திழுப்பதற்கும் உதவும்.
- அரசாங்கத்தின் சீர்திருத்த முயற்சிகளுக்கு ஆதரவு கொடுத்தல்: சீர்திருத்தங்கள் திறம்படச் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்ய இது உதவும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பது கடினமான பணியாக இருந்தாலும் அது சாத்தியமே. அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுத்து விரிவான பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தைச் செயற்படுத்தும்போது இலங்கையானது நெருக்கடியிலிருந்து வெளிவர முடியும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

**+94-777-802-900**
**Email: swaminathan@agsarma.com**



> எப்ப உந்தத் தள்ளு வண்டில் இல்லாமல் போச்சுதோ அண்டையிலை இருந்து வீடுவழியை இருந்த சந்தோசம் சொல்லிக் கொள்ளாமல் எங்கையோ போய்த் துலைஞ்சு போக வருத்தம் வாதையளும் துன்பம் துயரங்களும் தங்கடை பாட்டிலை குடிபுகுந்து ஈச்சாரிலை இருந்து காலாட்டிக் கொண்டு இருக்குதுகள்

# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

முந்தி ஆற்றையும் வீடுகளிலை ஆரும் பிள்ளைத்தாச்சியள் இருந்தினம் எண்டால் பத்தியத்துக்குச் சரக்குத்தூள், ஊறல், தடுக் குப்பாய், தொட்டிலோட தேவைப்படுகிற இன்னுமொரு சாமான்தான் தள்ளுவண்டில் எண்டுவா எங்கடை ஆச்சி. .அநேகமான வீடுகளிலை மரத்திலை செய்த உந்தத் தள்ளுவண்டில் கோடியுக்கை இறப்பில தொங்கும். பிறந்த பிள்ளை தடுக்குப் பாயில் உடும்பு பிடிச்சு பிறகு உருண்டு பிரண்டு தவண்டு தத்தித் தத்தி நடக்கத்தொடங்க கோடியில தொங்கிற உந்தத் தள்ளுவண் டில் தோஞ்சு குளிச்சுத்துப்பரவா. வீட்டுக் கைவரும்.

அப்பிடி வீட்டில பழைய தள்ளுவண்டில் இல்லையெண்டால் புதுசா ஆசாரிமாரிட்டை சொல்லிச்செய்விப்பினம். இல்லாட்டில் அய லட்டையில இருந்தால் இரவல் வாங்குவி னம். அயலட்டையில குடுத்து வாங்கிறது திண்டு குடிக்கிறது எண்டது முந்தி ஒரு பாரம்பரியமா பண்பாடா இருந்தது. என்ன தான் கோபதாபம் இருந்தாலும் முந்தி ஐயோ எண்ட குரலுக்கு அயலட்டையிலை உள்ளவைதான் ஓடி வருவினம். இப்ப அயலட்டையிலை ஆர் இருக்கினம் ஆர் போகினம் ஆர் வருகினம் எண்டே தெரி யாமல் கிடக்குது. குடுக்கல் வாங்கல் உண் பனவு குடிப்பனவு எண்டு ஒரு கோதாரியும் இல்லாமல் போட்டுது எண்டு ஆச்சி பெரு மூச்சு விடுவா.

முந்திப் பேரன் பேத்திமாருக்கு தங்கட பேரப்பிள்ளையளிட்டை உந்த தள்ளு வண்டிலைக் குடுத்து தள்ளி நடை பழகவிட் டிட்டு அவையும் பின்னால குனிஞ்சு அன்ன நடை போடுறது பெரிய பொழுது போக்கு. சிலநேரம் பேரன் முன்னால வழிகாட்டிக் கொண்டு போக பின்னால பேத்தி குந்தியி ருந்து அரக்கி அரக்கி நடந்து கொண்டு பிள்ளை பத்திரம் பிள்ளை பத்திரம் எண்டு சொல்லிக்கொண்டு போவா. பிள்ளை நடக்க நடக்க அச்சா அச்சா எண்டு கை தட்டுவினம்.

நடை பழகிற முத்தத்தில இல்லாட்டில் விறாந்தையில குப்பைகூழம் ஒண்டும் இருக்காது. அநேகமா ஆம்பிளைப் பிள் ளையோ பொம்பிளைப்பிள்ளையோ உரிஞ் சாங்குண்டியாத்தான் நடைபழகுவினம். சில இடங்களில பொம்பிளைப் பிள்ளைய ளுக்குப் போனாப்போகுது எண்டு ஒரு சின்ன இலை வடிவத்தில பவுணிலையோ வெள்ளியிலையோ செய்து அறுணாக்கொடி யிலை கட்டி விடுவினம். அது முன்னால ஒரு மறைப்பு மாதிரித் தொங்கும். உதைத் தான் மேகலாபரணம் எண்டு பழைய இலக்கியங்களில சொல்லிக் கிடக்கெண்டு ஆச்சி சொன்ன ஞாபகம்.நடை பழகி முடி யத்திரும்பவும் உந்தத் தள்ளுவண்டியள் அடுத்த பேரப்பிள்ளையை எதிர்பார்த்தபடி கோடி இறப்பில தொங்கப்போடும்.

உப்படி அதுகள் சந்தோசமா இருந்த தாலை அந்தக் கிழடு கட்டையள் ஒரு வாதை வருத்தம் கொள்ளை கோதாரி ஒண்டும் இல்லாமல் இருந்ததுகள். பிள்ளை குட்டியள் பேரப்பிள்ளையளுக்கை பேரன் பேத்திமாருக்கை ஒரு அன்னியோன்னியம் இருந்தது. சந்தோசத்துக்கு குறை ஒண் டும் இருக்கேல்லை இப்ப கன இடங்க ளில குழந்தையள் பாவங்கள் அதுகள் என்ன பாவம் செய்ததுகளோ தெரியாது. இறுக்கிக்கட்டின பம்பர்ஸோட வோக்கருக்கை காலை இறுக்கிக் வைச்சுக்கொண்டு மூடின அறையுக்கை கை தட்ட ஆளுமில்லாமல் நடை பழகுதுகள். அதுகளின்ரை பேரன் பேத்தியும் என்ன பாவம் செய்ததுகளோ தெரியாது ஊரில இருந்து கொண்டு பேரன் பேத்தி நடந்து பழகிறதைக் கனவில பாத் துக் கண்ணீர் சிந்திக்கொண்டு இருக்குது கள்.

எப்ப உந்தத் தள்ளு வண்டில் இல்லாமல் போச்சுதோ அண்டையிலை இருந்து வீடுவழியை இருந்த சந்தோசம் சொல்லிக் கொள்ளாமல்எங்கையோ போய்த்துலைஞ்சு போக வருத்தம் வாதையளும் துன்பம் துயரங்களும் தங்கடை பாட்டிலை குடி புகுந்து ஈச்சாரிலை இருந்து காலாட்டிக் கொண்டு இருக்குதுகள். உறவுகளும் சீர் கெட்டு முதியோர் இல்லங்களும் கூடிக் கொண்டு போகுது.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2023இல் வெளியிடப்பெற்றது.